உ

முருகன் துணை.

நக்கீரதேவர் திருவாய்மலர்ந்தருளிய

# திருமுருகாற்றுப்படை பொழிப்புரையும், அரும்பதவிளக்கமும்.

இவை

ஸ்ரீமத். பென்ஷன் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்,

**S துரைசாமி ஐயர் அவர்களால்**

இயற்றப்பட்டது

முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,

ஸ்ரீமான் - ஆ. கமலநாத முதலியாரவர்களால்

பரிசோதனைபெற்று செட்டியார் வேண்டுகோளின்படி,

முதற் பதிப்பு.

கோ-செல்வரங்கம் அன்டு கோ,

அவர்களாற் றமது

சென்னை:

மநோன்மணி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[இங்கிலீஷ் 1920. அணா—2.]

COPY-RIGHT REGISTERED.

முருகன் துணை.

# திருமுருகாற்றுப்படை

## பொழிப்புரை.

---

### முன்னுரை.

[நச்]சினார்க்கினியர் அளித்தவுரையிருக்க, அதை யாதார
[மா]கக்கொண்டு ஆறுமுகநாவலர் செய்த வுரையிருக்க இப்
பொழிப்புரைக் கவசியமென்னவென்ற கேள்வியு[illegible]ம்.
மேற்கண்ட இவ்விரண்டுரைகளுக்கும் "[illegible] தோமபேகை
[illegible]" என்றபடி, [illegible] வேண்டியிருப்பதா லவை
கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்படாவென்பதை [illegible]
[illegible] ஸ்ரீ ஆதிசங்கரர் திருச்செந்தில் [illegible]

[illegible]

முருகன் துணை.

# திருமுருகாற்றுப்படை பொழிப்புரை.

## முன்னுரை.

நச்சினார்க்கினியார் அளித்தவுரையிருக்க, அதையாதாரமாகக்கொண்டு ஆறுமுகநாவலர் செய்த வுரையிருக்க இப்பொழிப்புரைக் கவச்யமென்னவென்ற கேள்வியுண்டாம். மேற்கண்ட இவ்விரண்டுரைகளுக்கும் "டீகா டீகாமபேக்ஷதே" யென்றபடி, யிரண்டுரைகள்வேண்டியிருப்பதாலவை கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்படாவென்பதடிமையினனுபோகசித்தம். ஸ்ரீ ஆதிசங்கரர் திருச்செந்தில் திருமுருகனைப்பற்றிப் பாடிய ஸ்ரீ புஜங்கப்ப்ராயாதஸ்தோத்ரம் இருபத்தெட்டாவது ச்லோகத்தில் திருவாய் மலர்ந்தருளியபடி அடிமையும் அடிமையின் பெண்டு பிள்ளைகளும் எல்லோரும் முருகனைப்பூஜித்து, பணிந்து, துதிசெய்து நினைத்துக்கொண்டிருப்பது பற்றியும், வடமொழி வாஸனையில்லாதது பற்றியும் முருகனுவந்தது தென்மொழியே யானது பற்றியும், நித்யப்படி பாராயணத்துக் கேற்றபடி சுருக்கமாயிருப்பது இப் ப்ரபந்தமானது பற்றியும் எம்மில் தமிழ் எழுதப்படிக்க கற்றோர்கள் அந்நூலைக் கைக்கொண்டோம். கைக்கொண்டோமே தவிர அந்நூற் பொருள் கண்ட[illegible]

எங்களால் முடியவில்லை. அந்நூலின் லக்ஷ்யார்த்தம் கிட்டா விடினும் வாச்யார்த்தமாவது கிட்டாதாவென்ற எண்ணங் கொண்டு திருப்பித்திருப்பிப் பலதடவை பாராயணம் பண்ணிக்கொண்டுவருகிறோம். குடும்பத் தலைவனாகிய இவ்வடிமைக்கு ஆறுமுகநாவலரியற்றிய உரையின் உதவியால் ஆங்காங்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பொருள்விளங்குவதாக ஒரு தோற்றம் உண்டாயிற்று. பின்னர் எனக்குண்டான அவ்விளக்கத்தை என்னை யடுத்துள்ளவருக்கு உதவும்படி எழுதிவைக்கத் துணிந்தேன்.

இது இப்படியிருக்கச் சிலநாளைக்கெல்லாம் வள்ளிமலையில் தற்கால மெழுந்தருளியிருக்கும் திருப்புகழடியார் திருவடிச சென்னியார் என்னும் ஸ்வாமி சச்சிதாநந்தரின் கூட்டுறவு வாய்க்கப்பெற்றேன். அவருக் கிவ்வெழுத்தைக்காட்டத் துணிந்ததில் அவர் எனக்குற்சாகமூட்டி, உலகத்தில் கற்றோர் சிலர் மற்றோர் பலராகையால் அம்மற்றோர்க்கெல்லாம் இவ்வெழுத்து பயன்படுமென்று திருவுளம்கொண்டார். அங்ஙனமாகுமாறு இதை யச்சிலேற்றக் கருணை கொண்டார் அடிமைபிறப்பால் தெலுங்குப் ப்ராம்ஹணன். "பார்ப்பான் தமிழ் வழவழ கொழகொழ" வென்பது லோகப்ரஸித்தம். அதிலும் தெலுங்கன் தமிழ் இத்தன்மைத் தென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் ஸ்வாமி ஸச்சிதாநந்தரின் கருத்தை யென் கடமையாக வென்தலைமேற்கொண்டு நான் இதையச்சிலேற்றும் விஷயத்துக்கு இணங்கினேன்.

தவிரவும், குற்றங்களை நீக்கிக் குணத்தையே கொள்ள வேண்டுமென்பது புத்தகமியற்றும் பல்பேருடைய கோரிக்கை. என் கோரிக்கையோ யத்தன்மையதல்ல. என் குற்றங்களை யெடுத்துக்கூறுவாரையே யெனது பரமோபகாரிகளாக நான் கொள்வது ஏனென்றால், அவர்கள் என் குற்றங்களை நான் கண்டுகொண்டு அவற்றை சீர்திருத்திக்கொள்ளும் வண்ணம் என் கண்களைத்திறக்கிறார்கள். ஆகையால் இச் சிறுபுத்தகத்தைக் கண்ணுறும் புலவர்சிகாமணிகளே, இதிலுள்ள குற்றங்களைக் கண்ணோட்டமின்றி யெடுத்துக் காட்டியவைகளை சீர்ப்படுத்தும் வகையும் அநுக்ரஹிப்பீர்களாக!

3F
0-,1B9,11:K
FO

இங்ஙனம்:

வாலாஜநகரம்.
28-4-1919.

முருகனடியாருக்கடிமை,
ஸா. துரைசாமி.

# திருமுருகாற்றுப்படை

ஸ்ரீ குருப்ரம்ஹநேநமః.

ஸ்ரீ வள்ளிதெய்வயானைசமேத ஸ்ரீசுப்பிரமணியாயநமஃ.

நீ முருகனைக்கொண்டாடி வழிபட்டு அவன் திருவருளால்முக்திநிலையையடைய விரும்புவாயேயானால், அம்முருகனுடைய ஸாந்நித்யத்தை யடையக்கூடிய விசேஷ ஸ்தலங்கள் சிலவுண்டு. இதனால் இந்த ஸ்தலங்களைத் தவிர வேறு இடங்களில் முருகனையடைய ஸாத்யமில்லையென்று சொல்ல வந்தோம் இல்லை. ஆவின் உடல் முழுவதும் அதன் பால் பரவியிருந்தபோதிலும் அதன் முலைக்காம்பின் வழியாய்த் தான் அப்பாலைப் பெறக்கூடுமேயொழிய வேறுவழியால் முடியாததுபோல, அம்மேன்மைபெற்ற திருப்பதிகளுள் மேன்மைபெற்றவை :—மதுரைக்கு மேற்கேயுள்ள திருப்பரன்குன்றம் ; மதுரைக்குத் தென்பால் கடற்கரையோரம் பெற்ற திருச்சீர் அலைவாய் என்னும் திருச்செந்தில்; மதுரைக்கு வடமேற்கிலுள்ள திருவாவினன்குடி ; கும்பகோணத் தருகிலுள்ள திருவேரகம் என்ற ஸ்வாமிமலை, மலைகளின் உச்சிதோறும்; தற்காலம் சித்தூர் ஜில்லாவென்று வழங்கும் பிரிவின் தென்பாகத்தில் பொன்னையாற்றங்கரை யடுத்துள்ள மேல்பாடியைச் சேர்ந்துள்ள வள்ளிமலையென்னும் பழமுதிர் சோலையாகிய இவ்வாறுமாம். இவ்வாறும் திருமுருகனது படைவீடுகள் என்று பெயர்பெற்றன.

## திருப்பரன் குன்றம்.

இது பராசரரர் புத்ரர்கள் அறுவருக்குண்டான சாபத்தை நீக்கி அவர்களை எம்பெருமான் அநுக்ரஹிக்கத் திருவுளம்கொண்ட திருப்பதி. சூரபத்மாவை வேரோடுகளைந்து தேவர்களைச் சிறைநீக்கி அவர்களைத் திரும்பவும் விண்குடியேற்றின அருள்பெரும் பேற்றுக்கு ஒருவாறு கைம்மாறாக தன் புதல்வியாகிய தெய்வயானையம்மையை எம்பெருமானுக்கு தேவேந்திரன் பாணிக்ரஹணம் செய்துகொடுத்த திவ்யதேசம். அன்றியும், நக்கீரதேவர், தம்போலிகளான தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு ப்ரம்ஹரக்ஷஸனால் சிறைப்பட்டு அவனுக்கு உணவாகும் தருவாயில் எம்பெருமான் வேல்வாங்கி அப் ப்ரம்ஹராக்ஷஸைக் கொன்று ஆயிரவரையும் விடுவித்து வீடளித்த திருப்பதியும் இது. இது காரணம்பற்றியே இப்படைவீடு இப் ப்ரபந்தத்துக்குத் தலைப்புப்பெற்றதென்று ஊகிக்க இடம் உண்டு.

## திருச்சீரலைவாய்.

தேவர்களுக்குண்டான இடர்களை நீக்கும்பொருட்டு சூரபத்மா, ஸிம்ஹவக்த்ரன், தாருகாஸுரன் முதலியவர்களை யொழிக்கும்பொருட்டு, நவவீரர், இலக்கத்தவர், பூதவீரர் முதலானவர்களோடு பாசறை செய்தருளிய திருப்பதி இது. வியாஸரால் உபதேசம்பெற்ற சுகர், நாரதரால் உபதேசம்பெற்ற ஐராவதம் இவர்களால் பூஜிக்கபெற்ற திவ்யதேசம் இது.

## திருவாவினன் குடி.

லக்ஷிமி, காமதேனு, சூரியன், பூமி இவர்கள் எம்பெருமானை வழிபட்டதிருப்பதி இது. இதுதான் பழநி. அன்றியும் இதற்கு இன்னொரு ஐதீகமும் உண்டு. ஸ்ரீ கைலாஸத்தில் உமாஸமேதரான ஸாம்பமூர்த்தி தன் செல்வப்புதல்வர் இருவரையும் அழைத்து நுங்களில் யார் பூப்பிரதக்ஷணம்செய்து என் ஸந்நிதியை முந்தியடைகிறார்களோ அவருக்கு இந்தத் தேமாங்கனியென்று திருவாய்மலர்ந்தார். உடனே எம்பிரான் முருகன் திருத்தேரேறி பூதகணங்கள் புடைசூழ்ந்துவர பூவலம் செய்யப்புறப்பட்டார். ஓம்காரஸ்வரூபியாகிய விநாயகர் சிவபிரானே ப்ரபஞ்சமாகையாலும் ப்ரபஞ்சமே சிவஸ்வரூபமாகையாலும் சிவபிரானை வலம்வந்து இருந்த இடத்திலிருந்தபடியே தேமாங்கனியைப் பரிசாகப்பெற்றார். திருமுருகன் சிவபிரான் ஸந்நிதியடைந்து தேமாங்கனி முன்னமே தன் முன்னோனுக்கு அளிக்கப்பட்டதை யறிந்து மனம்நொந்தார். இந்த மனநோவைச் சிவபிரானால் தான் நீக்கப்பெற்ற திருப்பதிஇது. இந்த நோவைநீக்கும் கால்நேர்ந்தஸல்லாபத்தில் முருகனை சிவபிரான என்பழம் நீ யென்றாராம். அதுகாரணம் பற்றி இந்தத் திருப்பதிக்கு பழநியென்றுபெயர் அமைந்தது.

## திருவேரகம்.

இது தற்காலம் ஸ்வாமிமலையென்று பெயர்வழங்கும் திவ்யதேசம் இது முன்னொருகாலத்தில் திசைமுகன் கைலாஸத்தில் சிவதர்சனம்செய்து எமது முருகனைவழிபடாதேக

எம்பெருமான் சினந்து அச்சதுர்முகனைப் பாணவத்துக்குப் பொருள்கேட்க அவன் பொருள் சொல்லமாட்டாமல் திகைப்பதைக் கண்டு, அவன் தலையில் ஒரு குட்டுகுட்டி அவனைச் சிறைப்படுத்தினார். பிறகு சிவபிரான்வேண்டுகோளுக்கிரங்கி அச்சதுர்முகனைச் சிறைவிடுத்தார். ப்ரவணத்தின் பொருளைக் குமரன்வாயால் கேட்கவிரும்பின பரமசிவத்துக்குத் தான்வாயால் வெளியிட்டார் என்ற ஐதிகத்தை யுடையது இந்தத் திவ்யதேசம்.

* குன்றுதோருடல் - குன்றுதொறும் திருவிளையாட்டுக்கொள்ளுதல். மலையென்பது எங்குண்டோ அங்கெல்லாம் முருகன் ஸாந்நித்யமாயிருப்பான். ஆனதுபற்றி ஒவ்வொரு மலையுச்சியும் ஒரு திவ்யதேசம்.

---

## பழமுதிர்சோலை.

இதைப் பெரும்பான்மையார் பழநியென்று கொண்டிருப்பதுடன் இதற்குத் திருமாலிருஞ் சோலையென்றும், சோலைமலையென்றும், கள்ளழகர் கோயிலென்றும் மாறு பெயர் கூறுகிறார்கள். ஆனால் கந்தபுராணம் பாடிய அருட்கவி ஸ்ரீகச்சியப்ப சிவாசார்யார், இது வள்ளிமலையென்று கொண்டிருக்கிறார் என்று அடியிற்கண்ட செய்யுளால் ஏற்படும். முதலைந்துபடை வீடுகளைவர்ணித்துப் பிறகு ஆறும்படை வீடாகிய பழமுதிர்சோலையை வர்ணிக்கும் செய்யுளிது ;—" எழமுதிரைப்புனத் திறைவிமுன்புதன்

கிழமுதிரிளநலம் கிடைப்பமுன்னவன்

மழமுதிர்களிறென வருதல்வேண்டிய
பழமுதிர்சோலையம் பகவற்போற்றுவாம்."

இதன்பொருள் :—வள்ளிநாயகியார் முன்னமே யித்தினைப் புனத்தி லெழுந்தருளுதலும், தனது முதிர்ந்த கிழப்பருவத்திலேயே இளமைப் பருவத்துக்குரிய காமநுகர்ச்சி வாய்க்கும்படி தனக்கு மூத்தவனாகிய விநாயகன் இளமை முதிர்ந்த யானைபோலவர விரும்பின பழமுதிர்சோலையி லெழுந்தருளிய அழகிய பகவனாகிய முருகக்கடவுளைத் துதிப்போம் யாம். இத்திருவிளையாடல் நடந்தேறியது வள்ளிமலையிலானதால் வள்ளிமலைதான் பழமுதிர்சோலை யெனப் படுதிண்ணம். இது தற்காலம் சித்தூர் ஜில்லாவென்று வழங்கும் மாகாணத்தின் தென்பாகத்தில் நீவாவென்னும் பொன்னையாற்றங்கரையை யடுத்துள்ள மேல்பாடிக்கு அருகில் உள்ளது. இது குறிஞ்சியிற் குறிஞ்சியானதால் நூலாசிரியர் இப்படையில் கானவர் குலத்தவர் வழிபாடுகளை விரித்துரைத்திருக்கிறார்.

## நூல்.

ஒருமுருகாவென்றென் னுள்ளங்குளிரவு வந்துடனே
வருமுருகாவென்று வாய்வெருவாநிற்பக் கையிங்ஙனே
தருமுருகாவென்று தான்புலம்பாநிற்பத் தையன்முன்னே
திருமுருகாற்றுப் படையுடனேவருஞ் சேவகனே!

திருமுருகன் தோற்றம் எப்படிப்பட்டதோ அதைச் சற்று விசாரிப்போம், அண்டபிண்ட சராசரங்கள்—உயிர்

உள்ளன இல்லன—யாவும், எவன் ஒளியும்வெப்பமும் இன்றி யிராவோ. அப்புகழ்பெற்ற சூர்யன், அகச்சமயத்தாரும் புறச்சமயத்தாருமாகிய யாவராலும் போற்றப்பெற்று, மகா மேருவை வலம்செய்து நீலநிறக் கடலின்மேல் உதயமான மாத்திரத்தில் மேற்கண்ட உயிர் உள்ளன இல்லன வெல்லாம் களிப்படையும். இது காரணம்பற்றியே சூரியன் தோன்றாமல் மேகங்கள்பரவி அடைமழைபெய்யும் நாளைத் தார்த்தினமென்று, யதிகள உண்டிஉட்கொள்ளாமல் தவிர்ப்பது. அப்படிநேர்ந்த தார்த்தினம் கடந்து மறுநாள் காலையில் சூர்யன்தோன்ற, உலகமுழுதும் எப்படி ஆனந்தமடைகிறதோ அப்படியே, நீலநிறக்கடலுக் குவமையான பச்சை மயில்மேல்தோன்றும் எம்பெருமான்தோற்றம் உலக முழுதுக்கும் ஆநந்தமளிக்கும் திறம் உடையது. இந்த்ரிய வ்யாபாரங்களால் இழுபட்டு, மனமானது அலைபாயாமலிருக்கும் பொருட்டுக் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் பெரியோர்களதுளக் கண்ணுக்கு அவர் அவர் ஹிருதாயாகாசத்தில் எம்பெருமான் ஒளிவிளங்கும். ஊன் கண்கொண்டு நோக்குகிறவர்களுக்கு நெடுந்தூரத்துக்கும் அவ்வொளிவிளங்கும், அவருடைய திருவடிப் பெருமையோ, தன்பால் பக்திபெற்றவர்களைப் பிறவிக்கடலில் ஆழாமல் முக்திபெறச்செய்யும் பக்தியில்லாமல் வெறுப்பவர்களாகிய அசுரர்முதலிய நாஸ்திகரை வதைக்க இடிபோல் வலிபெற்றன எம்பெருமான் திருக்கரங்கள், மாசற்ற கற்பினையுடைய வள்ளியம்மை, தெய்வயானை யென்ற உபயநாச்சியார் வீற்றிருக்கப்பெற்றவர் எம்பெருமான். அவர் திருமார்பில்

அசைந்து புரளும் பாக்யம்பெற்றன செங்கடப்பம்பூவினால் தொடுக்கப்பட்டு தேர்வடம்போல் பெருத்து உருண்ட மாலைகள். கருநிறத்த சூல்கொண்ட மேகங்களின் முதற் பொழிவுபெற்று நறுமணம்பொருந்திய குளிர்ந்தகாட்டில் செழித்தோங்கி, கைக்கு அடங்கப்பெறாத பெருத்த அடி மரத்தையுடையனவாய்த் தழைத்து அக்காடு முழுவதும் சூர்ய கிரணங்கள் நுழையமுடியாமல் இருள்பெறச் செய்பவை அம்மரங்கள் எம்மான் திருமுடிக்கோலமோ, சூர்ய கிரணம் நுழைவதற்கிடமில்லாமல் அவ்வளவு நெருக்கமாய் மரங்களால் மூடப்பெற்ற மலையில்பூத்து, வண்டும் மொய்த்தறியாத நெருப்பைப்போல் செக்கச்சிவந்த காந்தட்பூவினால் செய்யப்பட்ட குளிர்ந்த கொண்டைமாலை யணிந்துள்ளது. அக்காந்தட்செடி முளைத்திருக்கும் மலையில் மூங்கில் செறிந்து வளர்ந்துள்ளன. செய்யன் சிவந்த உள்ளங்காலும் அதன்மேல் தண்டைசலங்கை யணிந்து உருண்டுதிரண்ட கணைக்கால்களும், வளைந்து ஒடிந்து போகும்போல் உள்ள இடுப்பும், மூங்கில்போல் அடிபெருத்துப் போகப்போகச் சிறுத்துவரும் இரண்டு கைகளும், இந்த்ரகோபப் பூச்சி போல் இயற்கையாகத் தன்னிறம்பெற்ற சிவந்தபட்டாடையும், பல ரத்னங்களிழைத்த காஞ்சியணிந்த அடியிடுப்பும், பிறரால் செய்யப்படாது தானாகவாய்ந்த பேரழகும், சாம்பூநதத்தில் உண்டான பத்தரைமாற்றுத் தங்கத்தால் செய்யப்பட்ட ஆபரணங்களையும், வெகு தூரத்துக்கும் ஜ்வலிக்கப்பெற்ற சரீரகாந்தியும், இவைகள் எல்லாம் வாய்க்கப்பெற்ற தேவகன்னிகைகள் அனேகர் ஒருங்குகூடி, சிற

பெற்ற எதிருள்ள மலைகளில்தாக்கி எதிரொலி ஒலிக்கும் படி யவ்வளவு உரக்கமுருகவாழி, சேவல்கொடிவாழி யென்று குறிஞ்சிப்பா பாடபெற்றது அம்மலைக்காடு. இது நிற்க அத்தேவகன்னிகைகளின் மெய்யலங்காரம் எத்தன் மைத்து. சிவந்த காம்புகளையுடைய வெட்சிப்பூவின் இதழ் களின் நடுவில் குவளையிதழ்கள்வைத்து, சடையிலே யணி ந்து, வலம்புரிவடிவாகத தலைஸாமான்களை வைக்கவேண் டிய இடத்தில்வைத்து பொட்டிட்ட நெற்றியில மேல்கண்ட தலைஸாமான்களை மகரத்தின். திறந்த வாயைபபோல் சீர்ப் படுத்தி அழகான கொண்டைபோட்டு அக்கொண்டையில் சில்லென்றிருக்கும் சண்பகமலர்களைச செருகி, வெளிப் புறம் வெண்மையாகவும் உட்புறம் பசுமையாகவுமஇருக்கிற மருதம்பூக் கொத்துகளை அக்கொண்டையில் தொங்கவிட்டு அக்கொண்டையைச் சுற்றிலும் அரும்பாற கட்டினமாலை யைச் சுற்றி வளைந்த காதுகளுக்குசசரியாக அவைகளில் தொங்கவிட்டிருக்கும் அசோகந்தளிர மாலை ஆபரணமணிந்த மார்பில் அசைந்தாட, வைரம்பெற்ற சந்தனக்குழம்பை வாஸனைபெற்ற மருதம்பூ வுருவம் பெறும்படி மார்பில் அப்பி, யதன்மேல் வேங்கைமலரின மகரந்தபபொடியைத் தூவியிருக்கும்.

ஞானசக்தியே உருவெடுத்துவந்த அந்த வேலாயுதத் தின் பெருமை யெத்தன்மைத்தோ? சூரன் பதுமன் என்று ரூபங்கள் சூரபதுமன் என்று ஒரு வுருவம்கொண்டு எம்பெருமானோடே பலவகையாய்ப் போராடித் தோற்று மரமையைக் கைக்கொண்டு பாறையை யடவாரமாக

கொண்ட குளிர்ந்த ஸமுத்ரத்தில் புகுந்து அங்கே ஒரு பெரிய மாமர வுருவெடுத்து நின்றனன். இம்மாமரத்தின் பூங்கொத்துகள் மற்ற மாமரங்களின் பூங்கொத்துகளைப் போல் மேல்நோக்காமல் கீழ்நோக்கி நின்றன. இவ்வசுரன் வர விசேஷத்தால் தன்னுடன் எதிர்த்து போராடுவோர் பலத்தில் ஸரிபாதி தன்னை வந்தடையும் இயல்புடையவன் அவ்வரம் எம்பெருமான் திருக்கைவேலின்முன் பலிக்க வில்லை. இம்மாயாரூபங்கொண்ட வசுரனைத்தொடர்ந்து,கடலிற்புக்கு, அவனை யிருகூறாக்கி, அசுரர்குலத்தை வேரோடு களைந்தது எம்பெருமான் திருக்கைவேல். இவ்வெற்றியை யெதிர்நோக்கித் தோள்களைத் தட்டிக்கொண்டு வெற்றிக் களம்பாடிய பேய்மகள் துணங்கைக் கூத்தாடினள். துணங்கைக் கூத்தாவது, பெருவிரலொழிய மறுவிரல்களைமுடக்கி நீண்ட பெருவிரல்களை மார்பில்குத்திக்கொண்டு ஆடும் ஒரு வகைக்கூத்தாம். இப்பேய்மகளின் கோரரூபம் எப்படிப் பட்டதென்றால், பொசுங்கிய மயிர், வரிசைதப்பிய பல், பெரியவாய், கோபத்தாற் சுழன்று பசுநிறம்பொருந்திய கண், யாவரும்பார்த்துப் பயப்படும்படியான தோற்றம், நெருப்புக்கண்ணுள்ள கோட்டானும், கொடியவிஷத்தைக் கக்கும் பாம்பும், தொங்குவதனால் அக்காதுகளின் பளுவைத் தாங்கமுடியாமல் அல்லற்படும் பெரியமுலைகள், பெருத்த கரடுமுரடான வயிறு, வளையணிந்த கையில் நாற்றம்வீசும் ஒரு பெருந்தலையை யேந்தி, யதிலுள்ள கண்களை ரக்தம் வடியவடிய வாயிற்போட்டுக்கொள்ளும் கூரியநகங்களுள் அமைந்த விரல்கள். இக்கூறுகள்கொண்டது அப்பேய்

மகளின் கோரரூபம் இக்கோரரூபத்துடன் அசுரருக்குப் பயப்படாமல் எம்பெருமானுக்கு நேரிடும் வெற்றியை எதிர்நோக்கி ஆநந்தக் கூத்தாடிக்கொண்டு அவர்களுக்கு எதிரில் சென்றனளாம்.

இப்படி மகிமைபெற்ற தாள்கள், கைகள், மார்பு, திருமுடிகள் அமைந்த லோகநாயகனாய், என்றும் பிள்ளையோனாய் இருக்கும் எம்பெருமானுடைய திருவடிகளைக் களங்கமற்ற வுள்ளத்தோடுவணங்கி அதற்கேற்ற சாஸ்திர க்ரியைகளைச் செய்வதால் உண்டாகும் மெய்ஞ்ஞானத்தை ஸாதித்து அத்திருவடி நீழலையடையும்நெறியை நீ விரும்புவாயானால், உன்னுடைய பூர்வகர்ம சுகிர்தங்களால் பலவற்றையும் வெறுக்கின்ற வுன்னுடைய சுத்தமாகியமனசிலே யிந்த மோக்ஷவிச்சை பிறந்தவுடனே, பரமாத்மஞானம் கைத்து இந்த க்ஷணமே முக்திபெறுவாய், அந்த வழிபாட்டைவேண்டி எம்பெருமான் மூலமாய் நீ முக்திவேண்டினமையால் அவர் எழுந்தருளியிருக்கும் முக்யமான திவ்யதேசங்களின் பெருமையைச்சொல்லக்கேள். அவற்றில் ஒன்று திருப்பரங்குன்றம். இது கோட்டை கொத்தளங்கள், மாடமாளிகைகள், மலிந்த கடைத்தெருக்கள் இவைகளால் அலங்காரம் பெற்ற மதுரைக்கு மேற்கிலுள்ளது. வண்டுகள் மொய்க்கப் பெற்ற தாமரைத்தடாகங்களும் நீர்வளம் நிலவளம்பொருந்திய கழனிகளும், பூஞ்செடிகளடர்ந்த மலைச்சுனைகளும் இதற்கு நாற்புறமும் உள்ளன. இந்தத் திருப்பதியில் எம்பெருமான் அருட்கோலத்துடனெழுந்தருளியிருக்கிறார். இத்திருக்

கோயிலின்முன்பாக ஆகாயமளாவிய சேவற்கொடி நாட்டி யிருக்கும். இனி யிப்புவியில் அசுரரோடு போரேயற்றது இனிப் போர்விரும்பிவரும் அசுரர்கள் எவரும்வரலாம் என்று கூவியழைப்பதற்கேற்ப, ஒருபாவையும் நூலாற் புனையப்பட்ட வொருபந்தும் அக்கொடியில் தொங்கவிடப் பட்டிருக்கும். போர்விரும்புவோர், அவ்விருப்பை வெளி யிட அப்பந்தையும் பாவையையும் அறுத்துக் கீழ்வீழ்த் தலாமென்ற ஸங்கேதம். அவற்றையறுத்துக் கீழ்வீழ்த்தத் துணிபவரின்றி அப்பாவையும் பந்தும் இன்றைக்கும் தூங் கிக்கொண்டிருக்கின்றன. இத்திருப்பரன் குன்றம் தவிர இன்னும் வேறு திருப்பதிகள் உள்ளன.

திரு — மங்களவாசகம் - அஷ்டைஸ்வர்யம் பொருந்திய
பரன் :— ஒப்பற்றவனாகிய எம்பெருமான் முருகனது
குன்றம்— மலை.

பரன் - பரம் என்றுகொண்டு திருப்பரங்குன்றமென் பாருமுளர். பரம் - எல்லாவற்றுக்கும் மேலாகிய—அதற் குமேலில்லாதவென்ற பொருள் கொள்ளும்.

---

## திருச்சீரலைவாய்.

திரு — மங்களவாசகம் - அஷ்டைஸ்வர்யம் உள்ள
சீர் — பெருமைபொருந்திய
அலை — அலைகளுக்கிடமாய ஸமுத்ரம். (இடவாகுபெயர்)
வாய் — முகத்திலுள்ளது.

ஸமுத்ரதீரத்தில் இருக்கப்பெற்ற திருப்பதி :-

கூர்மையான அங்குசத்தால் குத்தப்பட்டதினால் உண்டான வடுவும், அழகிய புள்ளிகளும் உள்ள மத்தகத்தில் முகபடாமும், என்றைக்கும் வாடாத பொன்மாலையும் கிடந்து புரள, இருபுறமும் கிணீர் கிணீரென்று மாறியொலிக்கும் மணியோசையுடனே கடியநடையும் பிறர் யாவராலும் தடுத்தற்கரிய வலியும் வாயுவேகமும் அமைந்த யானைவாகனம் கொண்டார். இனிமேல் அழகுபெறச்செய்வதற்கு இடமில்லையென்று செய்வினையைந்நினாலும் முற்றுப்பெற்று பலவகை மணிகள் இழைக்கப்பெற்று மின்னல்போல் காந்திபெற்ற கிரீடங்கள் சிரசில் ஜ்வலித்தன. ஒளிபெற்று அசையும் மகரகுண்டலங்கள் காதில்தொங்கி, ஆகாயத்தி லிருந்துகொண்டு வெகு தூரமாயிருக்கும் பூமியில் ப்ரகாசிக்கும் சந்த்ரனைசுற்றி இருக்கும் நக்ஷத்ரங்கள்போல ஒளிவீசின. ஆறுமுகங்கள், களங்கம் நீங்கிய ஏககாலத்தில் உதயமான ஆறுசந்திரர்களாகவும் பன்னிருகாதுகளில் அணியப்பெற்ற மகரகுண்டலங்கள் நக்ஷத்ரங்களாகவும் பாவும், வ்ருதங்கள் அநுஷ்டிப்பதில் வருத்தம் என்றதையே உணராது தங்கள் தவங்களை முற்றுபெறச் செய்துகொள்ளும் மகான்களுடைய வ்ருத யாகசத்தில் ஒளிபெறத்தோன்றும் முகங்கள் ஆறு. இவற்றுள் ஒருமுகம் பூமியைக் கவிந்துகொண்டிருக்கும் வெளியிருளையும் உள்ளிருளையும்போக்கி ஒளித்து ஜ்வலிக்கும். ஒருமுகம், துதிக்கும் பக்தர்களுடைய குற்றங்களைப்போக்கி அவர்களுக்கு இனிதாய்நடந்து அவர்மேல் அன்புகொண்டு அவர்கள் வேண்டும் வரங்களையளிக்கும். ஒருமுகம்வேதத்திற்சொல்லிய முறைதவறாதுவிதித்த

படி யந்தணர்செய்யும் வேள்வி அசுரராற் சிதைவுபடாமற் காக்கும். ஒருமுகம் வேதாகம இதிஹாஸ புராணங்களிற் பதிந்து பொதிந்து கிடக்கும் ரஹஸ்யார்த்தங்களைக் கலை நிறைந்த சந்திரன் உலகெங்கும் ஒளிவீசி இன்பமளிப்பது போல், ரிஷிகளின் மனதில் இன்பவூற்றெடுக்கும்படி ஸந்தேஹ விபரீதங்களைப்போக்கி உண்மைப்பொருளை விளக்கும். ஒருமுகம், சுரர்களும் அசுரர்களும் ஒரேதகப்பன் பிள்ளைகளாயிருப்பதைப்பற்றி ஒரேவித அன்புக்குரியர்களென்னும் ஸமபாவத்தைக்கொள்ளாது, தீத்தொழில புரியும் அசுரரிடம் வெறுப்பும் நற்றொழில் புரியும் சுரரிடம் விருப்பும்கொண்டு அசுரர்களை நசுக்கிக்கொல்ல வேண்டுமென்ற கோபத்தீ யுட்கொண்டு யுத்தத்தையே நாடிநிற்கும். ஒருமுகம் குறவருடைய மகளாகிய நுண்ணிய இடைபெற்ற வள்ளியம்மையோடு புன்சிரிப்புடன் ஸல்லாபம் செய்யும். இவ்வாறு இவ்வாறுதிருமுகங்களும் தத்தம் தொழில்களை நடத்திவர, இவைகளுக்கேற்ப, உத்தமலக்ஷணக் குறியாகிய மூன்றுரேகைகள் அமையப்பெற்று ஹாரங்கள் அணிந்த விசாலமானது திருமார்பு, அத்திருமார்பின் ரேகைகள் தோளளவும் சென்றிருக்கின்றன. அத்தோள்கள் பனிரண்டு. அப்பனிரண்டும் தமது வலிமையாலே புகழ்பெற்ற வாயுதங்களைவீசி பகைவர்களாகிய அசுரர்களுடைய மார்பைப்பிளந்து, அவ்வாயுதங்கள் தம்மிடம் திரும்பிவரப்பெற்றுக்கொள்ளும். "இது யுத்தஸமயத்தில் யுத்தமில்லாது அமைதி பெற்றிருக்குங்காலத்தில் என்றாலோ," கருணாரஸமாகிய முகத்துக்கேற்ப, வலதுகைகளில் ஒன்று ஆகாய

ஸஞ்சாரிகளாகிய தேவரிஷிகளுக்குப் பனிவெப்பங்களால் எவ்விதவூறுபாடும் ஏற்படாமல் பாதுகாக்கும். அதற்கிணையாகிய இடதுபுறத்துக் கை இடுப்பில் வைக்கப்பட்டிருக்கும். இன்னொருவலக்கை, அநுக்கிரஹிக்க யானைமீதேறிச் செல்வதுபற்றி அவ்வநுக்ரஹ திருமுகத்துக்கேற்ப அந்த யானையை நடத்துவதற்குள்ள அங்குசத்தைப் பிடித்திருக்கும். அதற்கிணையாகிய இடக்கை யுடுத்திருக்கும் பீதாம்பரத்தின்மேல் கிடந்து புரளும். இன்னொரு வலக்கையும் அதற்கிணையான விடதுகையும் யாகாதிகளைப் பாதுகாக்கும் முகத்துக்கேற்ப, அவ்யாகாதிகளைக் கெடுக்க வசுரர்கள் அணுகாதிருக்கப் பத்துத்திக்குகளிலும் காக்கும்படி வேல் வாள் முதலிய படைக்கலங்களை சுற்றிக்கொண்டிருக்கும். வேதஸாரத்தைவிளக்கும் முகத்துக்கேற்ப இன்னொரு வலதுகை மார்போடுசேர்ந்து சிசுமுத்திரை தர்சநம் பக்தர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கும். அதற்கிணையாகிய இடதுகை மார்பில் அணைந்திருக்கும் ஹாரங்களோடு விளையாடிக்கொண்டிருக்கும். யுத்தவாஞ்சைகொண்டிருக்கும் முகத்துக்கேற்ப ஒரு வலக்கை யாகாயமார்க்கத்தில், தொடி, படையேந்தி யுத்தமுத்திரை காட்டிநிற்கும். அதற்கிணையான இடக்கை கீழே தொங்கிக்கொண்டு இனிமையான இசைபிறக்கும்படி மணியை மாறிமாறி யொலிக்கும். வள்ளியம்மையுடன் நகையமர்ந்த முகத்துக்கேற்ப, ஒருவலக்கை நீலநிறத்தையுடைய வாகாயத்தில் ஸஞ்சரிக்கும் மேகங்களால் மிகுந்த மழைபெய்யச்செய்யும். அதற்

கிணையான விடதுகை ஸ்வர்கத்திலுள்ள தேவகன்னிகை களுக்கு மணமாலை சூட்டுவதில் ப்ரயத்னப்படும். இவ்வாறு ஆறுமுகங்களுக் கேற்பப் பனிரண்டுகைகளும் தத்தம் தொழில்களை நடத்திவரத் தேவதுந்துபி யொலிக்கவும், இடியிடித்தாற்போலப் பேரிகை கொட்டவும் சங்கநாதம் தொனிக்கவும், பல புள்ளிகளையும் பீலிகளையுமுடைய மயில் வென்றெடுத்த கொடியிலேறி சப்திக்கவும் ஆகாயமார்க்கத்தில் செல்லவேண்டி நன்மையோங்கி மேன்மக்களால் புகழ்ப்பெற்று மிக்க கீர்த்திவாய்ந்திருக்கும் திருச்செந்தூருக் கெழுந்தருளுதலும் அவருக்கு நிலைபெற்ற குணமாம், இதுவுமன்றி,

---

## திருவாவினன்குடி.

திரு — மங்களவாசகம் மாத்திரமல்ல. லக்ஷ்மியென்று பொருள்
ஆ — காமதேநு
இனன் — சூரியன்
குடி — பூமி.

லக்ஷ்மி, காமதேநு, சூரியன், பூமி இந்நால்வர் எம்பெருமானை வழிபட்டதிருப்பதி. பழனி.

எம்பெருமான் சாபத்தால் சதுர்முகன் தன் லோகத்தைவிட்டுப் பூலோகத்தில் இருக்கும்படி நேரிட்டகாலத்துச் சிருஷ்டியின்மையான காரணத்தால் மகாவிஷ்ணுவுக்கும் பரமசிவனுக்கும் முறையே காத்தல் தொழிலும் அழித்தல் தொழிலும் இல்லாமற்போகவே, சதுர்முகனுக்குப் பூர்வ

யதம் திரும்பிக் கிடைத்தாலன்றி த்தமக்குத் தத்தம் தொழில் நிலைபெறா என்பதையுணர்ந்து மேற்படி சதுர் முகனுக்கு முருகக்கடவுளைக்கொண்டு பூர்வபதவியை யுதவ முப்பத்து முக்கோடிதேவர் தம் புடைசூழ மகாவிஷ்ணு பரம்சிவன் தேவேந்த்ரனுகிய மூவரும் முருகக்கடவுளைக் காணவரும் சிறப்பை உணர்த்துவதிப்படை.

"முருகக்கடவுள் அசுரரைக்கொன்று தேவரைக்காத்துத் தெய்வயானையம்மையைத் திருமணம் செய்தபோது, தமது திருக்கையிலிருந்த வேலைநோக்கி, நமக்கிவைகளையெல்லாந்தந்த திவ்வேலென்று திருவாய்மலர்ந்தருள, அருகிலிருந்த ப்ரம்ஹதேவர் இவ்வேலுக்கு இந்நிலை என்னுல் வந்ததென்ருர். முருகக்கடவுள் நங்கையில் வேலுக்கு நீ கொடுக்க ஒரு சக்தியுண்டாவென்று கோபித்து, இப்படிச் சொல்லிய நீ பூமியிற்செல்வாய் என்று சபித்தருளினர். அவ்வாறே ப்ரம்ஹதேவர் படைத்தல் தொழிலைத்தவிர்ந்து, பூமியிற்சென்ருர். அங்ஙனமாகவே, மற்றை இருவருக்கும் காத்தல் தொழிலும் அழித்தல் தொழிலும் இலவாயின." ஸ்ரீ ஆறுமுகநாவலர்.

மரவுரியுடுத்து உருவத்திலும் நிறத்திலும் வலம்புரியைப்போன்ற சிங்கமுடித்து, முக்காலும் நீராடுவதால் உடம்பில் மாசற்றுப் ப்ரகாசிக்கும் தேஹகாந்தி படைத்து, கொண்டவ்ரதங்கள் நிறைவேறக் கருதித் தசையொடுங்கியென்பு மேல்தோன்ற, அதை மான்ருேலால்மூடிக்கொண்டு, பகல் உண்டியையும் அநேகநாள்வெறுத்துக் கோபம் என்

பகை யற நீக்கி யமைதியுடைய மனத்தினராய், எல்லாவற்றையும் கற்றவர்கூட வறிந்துணராத வறிவுபடைத்து, எல்லாக் கலைகளையும் கற்றோருக்குக்கூடத் தாமே யெல்லையாக வாய்க்கப்பெற்றவரும், காமக்க்ரோதாதிகளாகிய பதின்மூன்று துர்க்குணங்களை யடக்கித் தம் வயப்படுத்தி யாள்பவரும், தவத்தினால் உண்டாகும் சரீரவருத்தத்தை வருத்தமாகக்கொள்ளாமல் இன்பமாகக் கொள்கிறவரும், பிறர்பால் த்வேஷத்தைச் சிறிதளவும் பாராட்டாது மெய்யறிவு கொண்ட முனிவர்கள் முருகன் திருவருள்வாய்க்கப்பெறும்படி முன்னணியாகச்செல்லவும், புகையை விழுங்கிவிட்டது போல், தெய்வத்தன்மையால் அழுக்கற்றவுடையும், மொட்டுமலர்ந்த பூவினால்செய்யப்பட்ட மாலைதரித்த மார்பும் எக்காலத்தும் மெல்லிய சொற்களையேசொல்லும் கந்தர்வபுருஷர்களும், மாந்தளிர்போலத் தளதளவென்று ஒளிவீசும் தேஹ காந்தியும், அவ்வொளிதொறும் பொன்போல் விளங்கும் தேமலும், பன்னிரண்டு கோவைகொண்ட மேகலாபரணமணிந்த அடியிடுப்பும், வாய்ந்த காந்தர்வஸ்த்ரீகள் தம்முடன்கூட, எஃகு செவிகளில் பிணிக்கப்பட்ட நரம்புகளால், ச்ருதி யொழுங்குபெற்ற தெய்வீக வீணையில் பழக்கங்கொண்ட மனத்தினரானதுபற்றி, இசைக்குற்றம், உடற்குற்றம், தொழிற்குற்றமின்றி இவ்விருதிறத்தரும் வீணை வாசித்துவரவும், துளையுள்ள கோரைப்பற்களுக்குள் விஷத்தை யடக்கிக்கொண்டு, பெருமூச்சுவிட்ட மாத்திரத்தில் நெருப்பு ஜ்வாலைகள்வீசிக் கண்டோர் யாவரும் அச்சுறும்படியான ஸர்ப்பராஜாக்களை யொரேயடியுமல் அடித்துக்

கொல்லும்படியான அவ்வளவு வலிவுபொருந்தி, கோடுக ளுள்ள வளைந்த சிறகுகள் அமைந்த கருடனைத் தன்கொடி யில் அமைத்து, திக்பாலகர்களாகிய இந்த்ரன், யமன், வரு ணன், குபேரன் இவர்கள் நகரங்களை நிலைபெறச்செய்து அவர்கள் மூலமாய் உலகத்தை நிரந்தரமாய்க் காத்துவரும் விஷ்ணுமூர்த்தியும், யுத்தத்தில் வ்ருஷபக்கொடியை யுயர் த்தி, தன் னிடதுபக்கத்தில் உமாதேவியைநிறுத்தி, உறுதி கொண்டதோள்களும், இமையாமுக்கண்களும், த்ரிபுரம் அழித்ததால் உண்டான மிக்க வலிமையைப்படைத்த பரம சிவனும், உடலெல்லாம் கண்படைத்து நூறு அச்வமேதங் கள்செய்து, அவ்யாகபலத்தால் சத்ருக்களால் ஜயிக்கப் படாமையும், நான்குகோடுகளும் தரையில்புரளுகிற துதிக் கையும் யாவராலும் மதிக்கப்பட்ட ஐராவத வாகனப் பேறும், நீங்காச் செல்வம்படைத்த இந்த்ரனும் ஆகிய இம் மூவரும் ஹரிஹரப் ப்ரம்ஹர்கள் தத்தமக்குரிய தொழிலை எப்போதும்போலச் செய்து அவர்கள் தலைவராகவேண்டு மென்ற கோரிக்கைகொண்டு, அக்கோரிக்கை ப்ரம்ஹதேவ னுக்குப் பூர்வபதம் கிடைத்தாலன்றித் தமக்கு லபிக்கா தென்று உணர்ந்தவராய், த்வாதசாதித்தர், ஏகாதசருத்ரர் அஷ்டவசுக்கள், மருத்துக்களிருவர் ஆகிய முப்பத்துமூவர் முப்பத்துமூன்று கோடிகளாகப் பெருக்கமடைந்து, ஸித்த ஸார்த்ய வித்யாதரர் உள்பட பதினெண்கணத்தவர், நக்ஷத் திரங்கள்போல ஜ்வலித்து, கடலினிடத்து எழுந்த புயல் காற்றுபோல வேகம்படைத்து, காற்றுடன்நெருப்பு கலந்த தென்னக் திறல்கொண்டு, நெருப்புகக்கும்படி இடியிடித்

ததுபோல் பெருங்கூரல்படைத்துத் தங்களைச் சூழ்ந்துவர, ஆகாயமார்க்கமாய்த் தம்மை யெல்லோரும் காணவரப் பெற்ற திருக்கோலத்துடன் திருவாவினன் குடியில் குற்ற மற்ற கற்பினையுடைய தெய்வயானையம்மையொடு சிலநாள் திருக்கோயில் கொண்டிருத்தலும் உண்டு. தவிர,

## திருவேரகம் - என்றது ஸ்வாமிமலை.

திரு — மங்களவாசகம்
ஏர் — அழகுபொருந்திய
அகம் — வேதத்தின் அகப்பொருள். ஓம்காரம், ப்ரணவம்.

வேதத்தின் அகப்பொருளாகிய ப்ரணவத்தின்பொருளை வெளியிட்ட திருப்பதி. திருநாவுக்கரசு ஸ்வாமிகள் "அரி யானை யந்தணர்தம் சிந்தையானை" யென்னும் திருத்தாண்டகத்தில் "அருமறையினகத்தானை" யென்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதையும்; அருணகிரிநாதர் "நாதவிந்து கலாதீநமோநம"என்னும் திருப்புகழில் "வேதமந்த்ரஸ்வ ரூபா" வென்றருளியிருப்பதையும் சற்றேகவனிக்க. இது இவ்வடிமையின் பாவம்.

ஷட்கர்ம நிரதர்களான பழியில்லாப் பரம்பரையில் தோன்றினவர்களாய்,நாற்பத்தெட்டாவது வயதுவரையில் ப்ரம்ஹசர்ய ஆச்ரமத்தில் கழித்து. பிறகு இல்லறம் கைக் கொண்டு தர்மசாஸ்த்ரத்தை யெப்போதும் கூறுகின்ற கொள்கைகொண்டு, த்ரேதாக்னிவளர்த்து,அதனால் உண்டாகும் செல்வம்படைத்து, உபவீதம்தரித்த ப்ராம்ஹணர்கள் அர்ச்

சிக்கவேண்டிய காலங்களை யுணர்ந்தவர்களாய், ஸ்நானம் பண்ணி, உடுத்த ஈரவஸ்த்ரம் தங்களுடம்பிலேயே உலரும்படி யுடுத்து, "சரவணபவ" என்னும் ஆறு எழுத்தடங்கிய வேத மந்த்ரத்தை நாவெழவுச்சரித்து, நல்ல வாஸனையுள்ள புஷ்பங்களால் எம்பெருமானை யர்ச்சித்து, தலைமேல் கைகூப்பி வந்தந வழிபாடுகள் இயற்றுவதால் வெகு ஆனந்தமடைந்து திருவேரகத்தில் கோயில்கொண்டிருப்பதும் எம்பெருமானுக்கு இயல்பாம். இதுவுமன்றி,

## குன்றுதோறாடல்.

தங்களுடைய வலுத்துவில்லினால் கொலைத்தொழிலையே செய்துவரும் வேடர்கள், நல்ல வாஸனைபொருந்திய சந்தனக்குழம்பை மார்பிற்பூசிக்கொண்டு, நீண்ட மூங்கிலின் லேயிருந்து முற்றின தேனாற்செய்த கட்டெளிவை, மலையைச் சார்ந்திருக்கும் பட்டி தொட்டிகளில் உள்ள தங்கள் சுற்றத்தாருடன் குடித்துக களிகொண்டு, விரலால் தேய்ப்புண்டு வலியமலர்ந்தமையால் வேறுபடுகிற மணத்தையுடையவும், ஆழமான மலைச்சுனைகளில் உண்டாய் வண்டுவிழுகின்றவும் நீண்ட காம்புகளையுடையவுமான அரும்புகளால் தொடுக்கப்பட்ட மாலையையணிந்த கூந்தலையும, இலையைத் தலையிலேயுடைய கஞ்ஜாவையும் கடப்பமரத்தினிடத்துண்டாகிய நறுமணம்பொருந்திய வெண்மையான பூங்கொத்துக்களை இலையோடும் நீண்ட சிவந்த காம்புடனும் கிள்ளி இவ்விரண்டையும் ஒன்றற்கொன்று நடுநடுவேயிருக்கும்படி

தொடுத்தவண்டுவிழும்படியான மாலைகளை மேகலையுடன் அடியிடுப்பில் அணிந்து, மயிலின் தோற்றம்கொண்ட மந்தநடையையுடைய பெண்பாலரோடும் கூடிக்கொண்டு, அதாவது மேல்கண்ட வேட்டுவ ஆண்பாலரும் பெண்பாலருமாக, தங்களுடைய மலைநாட்டுக் குரித்தாகிய தொண்டகமென்னும் சிறு பறையோசைக்கிசையக் குரவைக்கூத்தாடிக்கொண்டுவர, வெள்ளரிக்காய், தூதுவளங்காய், தக்கோலக்காய், ஜாதிக்காய் இவைகள் நடுநடுவே தொடுக்கப்பட்ட பச்சிலை மாலையால் பூஜாரி தன்னையலங்கரிக்க, செந்நிறமுடையவராய், சிவந்தவாடைபூண்டு, செந்நிறமான அசோகம் பூங்கொத்துகளைக் காதுகளில் அணியப்பெற்று. கச்சைகட்டி வீரக்கழல்பூண்டு, வெட்சிப்பூமாலைசூடி, குழல்கொம்புடன் சில்லரைவாத்யங்கள் முழங்க, ஆட்டுக்கடா பின்தொடர மயில்வாஹனமேறிக் குற்றமற்ற சேவல்கொடிபறக்க குழந்தைவடிவம் துறந்து, விச்வரூபங்கொண்டு, தொடியென்னும் படையைக் கையிலேந்தி இடுப்பிலேகட்டிய வுதரபந்தனத்துக்குமேலே வாஸனையும் குளிர்ச்சியும் பொருந்திய நயமான உத்தரீயத்தைத் தரைபுரள உடுத்திக்கொண்டு, மெல்லிய இனிப்பான குரலோசையோடு பாடும்படியான பெண்களோடுலாவித்திரிந்து, பெண்மானையொத்த மெல்லிய தோள்களையுடைய பல பெண்களை மத்தளம்போன்ற விசாலமான தன்னுள்ளங்கைகளில் தழுவிப் பொருந்தும்படி யெடுத்துக்கொண்டு மலைக்கு மலை திருவிளையாட்டுக் கொள்வதும் எம்பெருமானாகிய முருகனுக்குப் பொருந்தும். இதுவுமன்றி,

## பழமுதிர்சோலை.

சிறு தினையரிசியொடு பூவுங்கலந்து கூடைகளில்நிரப்பி ஆட்டுக்கடா பலிகொடுத்து ஊரூராகக்கொண்டு நடத்தும் உற்சவாதிகளால் எம்பெருமான் களிப்படைந்து ப்ரஸன்னமாவதுண்டு. தன்னைப் பக்திபூர்வமாக ஸ்தோத்ரப்பாக்களால் ஸ்துதிக்கிறவர்கள் ஹ்ருதயத்தில் அன்புகொண்டு ப்ரஸன்னனாவதும் உண்டு. தன்னைப் பூஜிக்கும் பூஜாரி வேலைத் தன்கையிற்பிடித்துக்கொண்டு ஆடும் வெறியாட்டத்தில் ப்ரஸன்னமாவதுமுண்டு. காட்டிலும் சோலைகளிலும் ஆற்றிடைக்குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், முற்கூறிய வூர்களன்றி வேறு பலவூர்களிலும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்திகளிலும், புதிதாகமலர்ந்த கடப்பமரங்களிலும், ஊருக்குநடுவே பல்லோரும் கூடும் மரத்தடிகளிலும், அம்பலத்திலும், மந்தைவெளிகளில் மாடுகள் உராய்ந்து கொள்வதற்காக நட்டிருக்கும் குத்துக் கல்களிலும் பிரஸன்னமாவதும் உண்டு. கோழிக்கொடி நிறுத்தி ஸர்வாலங்காரத்துடன் எழுந்தருளப் பண்ணி, வெண் சிறுகடுகை யரைத்து அதை நெய்யோடுகலந்து மந்திரத்தை மெதுவாய்ச்சொல்லி நெற்றியில் ரக்ஷைபிட்டுக் குடக்கையாட்டமாடி அழகிய புஷ்பங்களைத்தூவி, வேறுவேறான நிறத்த இரண்டு வஸ்த்ரங்களை யுள்ளொன்று புறமொன்றாக வுடுத்துக்கொண்டு, செந்நூலால் காப்புக்கட்டிக்கொண்டு வெண்மையான பொரியைவாரி இறைத்து, வலிபொருந்திய காலுடைய பெரிய கடாவைவெட்டி அந்த

ரத்தத்தில் நல்ல வெண்மையான அரிசிபோட்டுப் பிசைந்து சிறுசிறு பலியாகச்செய்து அதை பல பிரப்பங்கூடைகளில் குறுணி குறுணியாகவைத்து, சிறு பசுமஞ்சளும் வாஸனைச் சந்தனமும் கூட்டிய குழம்பை, வாரித்தெளித்து, குளிர்ந்த வாஸனையுள்ள செவ்வலரிமாலையையும் இன்னும் இதர புஷ்பமாலைகளையும் ஓரளவாயறுத்து அசையத்தூக்கி மலைநாட்டுப் பட்டித்தொட்டிகளில் பிணி, பசி, பகையில்லா திருக்கவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்துகொண்டு, வாஸனை தூபங்கொடுத்துக் குறிஞ்சிப் பாட்டுப்பாடி, ஒலிக்கும் அருவியோடு இசையப் பல வாத்யங்களும் முழங்க மறுபடியும் பல நிறங்கொண்ட புஷ்பங்களால் அர்ச்சித்து, பார்ப்போர் பயப்படும்படியாக ரத்தம் கலந்த சிவந்த தினையரிசியைப் பாவாடையாகப்போட்டு, குறப்பெண்கள் தொண்டகப்பறைவாசிக்க, தம் வழிபடாத நாஸ்திகர்கள் பயப்படும்படி முருகன் ப்ரஸன்னமாக வேண்டுமென்று அவனை வேண்டி வருந்தும் அச்சம்பொருந்திய ஊரின்கண்ணே வெறிக்களம் கோலாஹலப்படும்படி அதற்கேற்பனவாகிய பல பாட்டுக்களைப்பாடி, பல கொம்புகளை ஏககாலத்திலூதி கொடியமணியடித்து, எம்பெருமான் வாஹனங்களாகிய யானையையும் மயிலையும் வாழ்த்தித் தன்னை வழிபடுகிறவர்கள் வேண்டினவரங்களை வேண்டியபடியே பெற்றுத் தன்னைப் பூஜித்துநிற்க வந்தவந்த விடங்களிலேயே ப்ரஸன்னமாகும் தன்மையையும் பொருந்தினவர் எம்பெருமான். நான் உனக்குமுன்சொன்னபடி பற்பலவான இடங்களி

லானாலும் ஸரி, வேறிடங்களிலானாலும் ஸரி, உனக்கு ப்ர ஸன்னமாகும் எல்லாவிடங்களிலும், நீ முகமலர்ந்து, உள்ளங்கசிந்து, ஸ்தோத்ரம்செய்து, உன்னிரண்டு கைகளையும் தலைமேல் குவித்துக்கூப்பி, ஸாஷ்டாங்கநமஸ்காரம்பண்ணி, பின்வருமாறு கதறித்துதி. சிவபெருமானுடைய நெற்றிக் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் வெளிவந்தகாலத்து வாயுபகவான் கையேந்திவாங்கித் தாங்கமுடியாமல் அக்னிபகவானிடம் கொடுக்க அவ்வக்னிபகவான் இமயமலைச்சாரலில் உள்ள நீலநிறத்த சரவணப்பொய்கையில் அவ்வக்னிகணங்களை யெழுந்தருளப்பண்ண அவை குழந்தைகள் உருவம்பெற ஆறுபேராகிய கிருத்திகைமாதாக்களால் வளர்க்கப்பெற்றவனே, உமாதேவிசேர்த்து எடுத்தபோது ஒன்றுகூடிய உருவம்பெற்ற செல்வனே, கல்லாலின்கீழ் தக்ஷிணாமூர்த்தியாகக் கோலங்கொண்ட சிவபெருமான் புத்ரனே, பெருமையாகிய மூங்கில்கள் வளரப்பட்ட மலையரசனின் புத்ரியாகிய பார்வதிதேவியின் குமாரனே, பகைவர்களாகிய அசுரர்களுக்குயமனே, மஹிஷாசுரனை வதைத்த துர்க்கையின் குமாரனே, சிவசக்தியில் ஒருவராகிய காடுகாளியின் புத்ரனே, வளைந்த வில்லையுடைய தேவஸேனாதிபதியே, மாலையணிந்த மார்பையுடையவனே, வேதசாஸ்திரங்கள் எல்லாவற்றையும் உணர்ந்த மகா பண்டிதனே போர்த்தொழிலில் ஒப்பற்றவனே, போரில் நீங்கா வெற்றியையுடையவனே, ப்ரம்ஹஞானிகளின் செல்வமே ஆத்மஞானம் பெற்றவர்கள் செய்யும் ஸ்தோத்ரமலையே, வள்ளியம்மை தெய்வயானையென்னும் உபயநாச்சியார்கணவ, வ

யார்க்கும் வலியானே, வேலாயுதம் கையிற்பொருந்தும்படி யானபெருஞ்செல்வம் பெற்றவனே, க்ரவுஞ்சகிரியைப்பிளந்து குறையாத வெற்றிபடைத்து ஆகாய மளாவிநிற்கும் மலைகளுள்ள குறிஞ்சிநாட்டுக்குப்ரபுவே,பரஸமய பண்டிதர்களாகிய யானைகளுக்கு எல்லோரும் புகழும்படியான இன்சொற்கள்படைத்த ஆணசிங்கமே, பிறரால் பெறுதற்கரிய முறையினையுடைய பரமார்த்தமாகிய மோக்ஷத்துக்கும் எஜமானாகிய முருகனே, அம்மோக்ஷலாபத்தை விரும்புவோர்க்கு அதை யநுகரஹிக்கும் கீர்த்தியுடையவனே, இடுக்கண் அடைந்தவருக்கு அருள்செய்யும் குமரனே, பயங்கரமான யுத்தங்களைவென்று அதனால் தன்மார்பில் அசையப்பெற்ற பொன்னுபரணங்களையணிந்தவனே, தேவர்களும் முனிவர்களும் தினம்போற்றும் பெரிய பெயருடைய கடவுளே, சூரபத்மாவின் குலத்தை வேரோடு நாசமாக்கியதால் தைர்யாம்சத்தில் மதவலியென்று பெயர்படைத்தவனே, யுத்தத்தில் சௌர்யமபடைத்த வலியவனே, பெரியபரம்பரையில் தோன்றினவனே, நான் அறிந்தவளவு உன்னைப்புகழ்ந்து போற்றியும எனக்குத் திர்ப்தி உண்டாகவில்லை உன்பெருமையை யளவிட்டுச்சொல்லுதல் மன்னுயிர்படைத்த எவனுக்கும அஸாத்யமான கார்யமானகால் உன்னுடைய திருவடிகீழலை யடையவேண்டுமென்ற கருத்துடன் நான் நின்சேடைந்தேன். ஒப்பற்ற மெய்ஞ்ஞானமுடையவர் நீரே என்று நீ விண்ணபபஞ்செய்யு முன்னரே அவருடைய பரிஜனர்களாகிய வெவ்வேறு உருவம் தாங்கிய பூதகணங்கள் ஒன்றாய்க்கூடி உற்சவமண்டபத்தில் அழகுவாய்ப்பத்

தோன்றி ப்ரபோ! கனிந்தமொழியினையுடைய புலவன் ஒருவன், இனியனவும் உறுதிபயப்பனவுமான உன்னுடைய கீர்த்திப்ராதாபங்கள் பலவற்றைக் கேட்டோர் இனிப்படைந்து மகிழும்படிவாழ்த்தி யிங்கேவந்தான். அவன்உன்னாலே அநுக்ரஹமடைய பாத்ரன் என்ற மாத்ரத்தில் தெய்வத்தன்மையும் பிறர் அச்சுறும்படியான விச்வரூபத்தைத் கொண்ட தான் அம்மண்டபமடைந்து, பிறர்கண்டு பயப்படும்படியான அந்த உருவத்தைத் தணந்து, வாஸனை கமழும் தெய்வத்தன்மை பொருந்திய குமாரரூபங்கொண்டு முக்திவிரும்பினவனும் நீ இங்குவந்தடைந்ததை நான் அறிவேன். அந்த முக்தியுனக்கு அஸாத்யமென்ற வெண்ணத்தை ஒழி. என்றுன்பேரில் அன்புகொண்ட இனியவார்த்தைகளை வுன்னுடன் கலந்துபேசி, கடல்சூழ்ந்த விந்த வுலகத்தில் நீயொருவனே பிறருக்கு முக்தியளிக்கத் தகுந்தவன் என்று தோன்றும்படி யிவ்விலையற்ற வெகுமதியாகிய திருவருளை உனக்கு அளிக்கும். யாரோ? அத்திவ்யதேசமாகிய பழமுதிர்சோலை யென்னும் வள்ளிமலையில் திருக்கோயில்கொண்டிருக்கும் எம்பெருமான் திருமுகன்-துகிற்கொடிகள்போல அநேக அகில்மரங்களை வேரோடுபிடுங்கி தம்மேல் மிதக்கும்படி தள்ளிக்கொண்டு, பெரிய சந்தனமரங்கள் உருண்டுவர, சிறியமூங்கில்செடிகளை தங்கள் பூண்வுடைய சிறுகிளைகளுடன் வேரோடுபிடுங்கி ஆகாயமளாவியடயர்ந்தமலைமேல் சூர்யமண்டலம்போல் கட்டப்பட்டிருக்கும் குளிர்ச்சியும் மணமும்பொருந்திய தேன்கூடுகள்கெடும்படிக்கும், நல்ல பலாப்பழங்கள்வெடித்து உள்ளேயிருக்கு

சுனைகள் தம்மிடத்தில் உதிர, மலையுச்சியில் பூத்திருக்கும் சுரபுன்னை புஷ்பங்கள் தம்மிடம் உதிர, கருங்குரங்கும் இதர குரங்குகளும் நடுநடுங்க, புள்ளியுள்ள மஸ்தகத்தையுடைய பெரியயானைகள் மெய்குலுங்க, ஆண்யானையின் முத்துள்ள கொம்புகள் உள்ளடங்கி, நன்மையான ரத்னங்கள் வெளிப்பட்டு ஒளிவீசி தம்கரையில் ஒதுங்க, வாழைமரம் வேரற்று விழவும் தென்னமரங்களிலிருந்து இளநீர்க்குலைகளை உதிர்த்து, கரிய பூங்கொத்துடன்கூடிய மிளகுக்கொடியின்சாய மந்தநடையை உடைய பீலிவாய்ந்த மயில்கள் பலவுடன் கோழிப்பெட்டைகள் அஞ்சியோட, உள்ளே வெள்ளையாய்ப் பனையின்சிறும்பைப்போன்ற கரும்மயிரால் மூடப்பட்டுவளைந்த சரீரத்தையுடைய கரடிகள் கற்பாறைவெடிப்புகளில் ஓடி ஒளிக்க, கரியகொம்புகளையுடைய காட்டெருதுகள்பயந்து முக்காரம்போட்டு ஓட, இப்படியெல்லாவற்றுக்கும் பயம் உண்டாகும்படி உச்ச்ர என்ற ஓசையோடு இறங்கியோடப்பெற்ற அருவிகள் அமையப்பெற்று வள்ளிமலையென்று மாறுபெயர்கொண்ட பழமுதிர்சோலைக்கு ஸ்வான்தாரனும் எம்பெருமான் முருகன்,

## போற்றிவெண்பாக்கள்.

ஓ! முருகா, க்ரவுஞ்சகிரியைப் பிளந்தாய், ஒலிக்கின்ற கடலிற் புகுந்தொளித்த சூரபத்மாவை வதைத்தாய், சிறு தலையையுடைய பூதங்களைச் சேனையாக வுடையாய், நித்ய பால்யதசையை யடையப்பெற்றாய், உவமையற்ற அழகு படைத்தாய், சிவபெருமானுடைய குமாரசிங்கமே என் மனதிலே நிரந்தரமாய்க் கோயில் கொள்வாயாக.

க்ரவுஞ்சகிரியைப் பிளந்ததுவும், இனியெக்காலத்தும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போரற்றது என்னும்படி செய்ததுவும், தேவதைகளுடைய வருத்தத்தைப் போக்கினதும், மலைக்குகையிலடைப்பட்டிருந்த என்னை ராக்ஷஸிக்கு ஆகாரமாகாதிருக்க காப்பாற்றினதும் எது தெரியுமா? அந்த எம்பெருமானுடைய திருக்கையிலமர்ந்திருக்கும் ஞானசத்தியாகிய வேல்.

அந்த வேலின் கீர்த்தியென்ன தெரியுமா? அது வீரமுடைத்து, கூர்மையுடைத்து, சூரபத்மாவின் சிறையிலிருந்த தேவர்களை மீட்டது, எம்பெருமான் திருக்கையில் அமரப்பெற்றது. ஸமுத்ரத்தில் முழுகிக்கிளம்பினது, எக்காலத்தும் வெற்றியையே தன்னிலக்ஷணமாக்கொண்டது, சூரபத்மாவின் மார்பையும், க்ரவுஞ்சகிரியையும் துளைத்துக்கொண்டு உருவிச்சென்றது, அடிமையாகிய எனக்கு எப்போதும் ஸத்யமான துணையாகவாய்ந்தது.

துஷ்டர்களை ஸம்ஹரிக்கும் தொழிலில்தேர்ந்த வேலால் சூரபத்மாவைத்தண்டித்த ஆண்டவனே! மலைமலையாகக் குவிந்துகிடக்கும் என் துன்பங்களையொழிக்கப் பனிமூடிய க்ரவுஞ்சகிரியைத் துளைத்த வேலை யின்னொருதரம் கையில் எடுப்பீராக.

உன்னையொழிய வேறெவரையும் நான் நம்பேன். வேறெவரையும் நான் வழிபடமாட்டேன், ஆயுதங்களாலலங்கரிக்கப்பட்ட பன்னிரு திருக்கரங்கள் அமைந்த ஆண்டவனே, தேவதைகளுடைய மகா கஷ்டங்களைத் தீர்த்தரு

ளிய வேலேப்படைத்தவனே, செந்திமாநகரில் கோயில் கொண்டவனே.

தன் பக்தர்களிடத்து அச்சங்கொண்ட முகந்தோன் றினல் ஆறுதல் அளிக்கும் தன் ஆறுமுகம் தர்சனமாகும். யுத்தம் என்பது தோன்றினல் வேல் ப்ரஸன்னமாகும். அப்பக்தர்கள் தம் வாழ்நாளில் தன்னே ஒருதரம் நினைத் தால் அவர் ஆயுளளவும் அவர்கள் ஹ்ருதாயாகாசத்தில் நிலேயாய்க் கோயில்கொள்வது எம்முருகன் இயல்பு.

நிரந்தரபால்ய மடைந்தவனே, செந்திற்ப்ரபுவே, மகா விஷ்ணுவின் மருமகனே, விநாயகமூர்த்தியின் இளேயோ னே, உன் தண்டை சிலம்பணிந்த திருவடிகளேயே நம்பி கைகூப்பித் தொழுவேன்.

இனிவரும் மூன்று வெண்பாக்களும் நக்கீரருரைத்த வல்லவென்பது சிலருடையதுணிபு திருச்செந்திலில் சிறிது காலம் திருப்பணி நடத்திவந்த மௌனஸ்வாமிகளின் வாய் மொழியென்பது ஊகம்.

1. பக்தர்களுடைய காப்பையே கங்கணமாகக்கொண்ட நீ உன் அடிமையைக் கைவிட்டால் அடிமையைக் காப் பாற்றுவது யாருடையபாரமாகும். புஷ்பிக்கும் கடப்ப மரத்திலிருப்பவனே முருகனே, ஒளிபெற்ற வேலேயுடை யவனே, இவ்விடம் உன்னுடைய கருணேக்குப் பாத்ரமா னது. ஆகையால் இவ்விடம் கருணேகொள்.

2. திருப்பரங்குன்றில் திருக்கோயில் கொண்டிருக்கும் நுண்ணிருகைபூண்ட தேவாதி தேவனுடைய திருவடியை

மனதில் ஆநந்தம் ஜனிக்க இரண்டு கைகளையும் தலைமேல் கூப்பி யளவற்ற ஆசையுடன் நியமமாகத் திருமுருகாற்றுப் படையை பாராயணம் பண்ணு ஓ மனமே.

3. நக்கீரர் திருவாய்மலர்ந்தருளிய திருமுருகாற்றுப் படை யென்னும் ப்ரபந்தத்தைத் தினந்தோறும் பாரா யணம் செய்துவந்தால் எம்பெருமான் பாலசுப்ரமண்யரூப மாகத் தர்சனம் த்ந்தருளி, மனததில் உள்ள எல்லாக்கவலை யும்போக்கி பக்தன்கோரிய எல்லாவரங்களையும் அநுக்ர ஹிப்பான்.

ஸ்ரீ சுப்பிரமண்யர் நமஸ்து.

## பின்னுரை.

முருகன் அன்பர்களுக்கும், தமிழ் நாவலர்களுக்கும் ஓர் விண்ணப்பம்:—நக்கீரதேவர் ஒவ்வொருபடை வீட்டுமுடி விலும் வெளியிட்டிருக்கும் கருத்துக்களை சற்றே கவனிக்க.

முதல்படை, மூன்றாம்படை, நான்காம்படை, ஐந் தாம்படை இவற்றின் இறுதியில் முறையே பின்வருமாறு கூறியுள்ளர். "குன்றமர்ந்துறைதலும் உரியன்" (2) "இன்னு ளாவினன்குடியசைதலும் உரியன்" (3) "ஏரகத்துறைதலு முரியன்" "குன்றுதோறாடலும் நின்றதன்பண்பே." இக் கூற்றுக்களிலுள்ள "உம்" எதிர்மறை உம்மையாகக்கொண்டு பொருள்படுத்தி யுறையாமை, அசையாமை, ஆடாமை இவை பெரும்பான்மை; உறைதல், அசைதல், ஆடுதல் சிறுபான்மையென்று கொள்ளத்துணிந்தேன் ஆனால்இரண் டாவதுபடையிறுதியிலுள்ளகூற்று, "சீரலைவாய்ச்சேரலும்

நிலையபண்பே" இதில் "நிலைய" என்பதற்கு. "நிரந்தரமான" "சாச்வதமான" வென்று பொருள்படுத்தவும்; ஆறுவதுபடை யிறுதியிலுள்ளகூற்று "பழமுதிர் சோலைமலைகிழவோன்" பழமுதிர்சோலைககுச் சொந்தக்காரன் ஆகையால் அங்கே நிரந்தரவாசியென்றும் பொருள்படுத்தவும் துணிந்தேன். ஆகையாலித்துணிபின்பயனாக நக்கீரதேவர் இவ்வாறு படைவீடுகளில் தாரதம்யம் கொண்டார் என்றும் ஊகிக்கத்துணிந்தேன். அத்தாரதம்யம் எங்ஙனமெனில் திருச்செந்தில், பழமுதிர்சோலை யென்னும் திருப்பதிகளில் தன்ஷோடசகலைகளோடும் மற்ற திருப்பதிகளில் தன் பின்னும்சங்களோடும் திருக்கோயில் கொண்டிருக்கிறார் என்பதொன்று அல்லது, எக்காலத்தும் தன் ஷோடசகலைகளோடு முதற்கண்ட விருதிருப்பதிகளிலும் மற்ற நான்குதிருப்பதிகளில் தான் உகந்தகாலங்களில் அதாவது விசேஷ பர்வகாலங்களில் மாத்ரம் திருக்கோயில்கொண்டிருக்கிறார் என்பதே. இத்தீர்மானம் ச்ருதியுக்தி யனுபவங்களுக்கொத்ததா வில்லையாவென்று தீர்மானிப்ப துங்கள் கடமை

இரண்டாவது விண்ணப்பம்:—குமரனுக்கு "ஸ்வாமிநாதன், குருநாதன்." உலகவழக்கத்தில் "தகப்பன்சாமி" என்றும்பெயர் வழங்கிவருவதால் முக்திதான கர்த்தாவாகிய பரமசிவனுக்குக்கூட எம்முருகன் ப்ரவணப்பொருளை உபதேசித்தான் என்றகொள்கை வேரூன்றியிருக்கிறது. இது அருட்கவி கச்சியப்ப சிவாசாரியார் அருளிச்செய்த ஸ்காந்தபுராணத்துக்கு முரணுகிறது. இந்த ஸம்பந்தத்தில் வ்யாகரணிகள் கொள்கையொன்றெடுத்துரைக்க இடம் கொடுப்பீர்களாக. வினா இரண்டுவகைத்து. அறிவினா அறியா வினாவென்று—அறிவினா வென்பது ஆசிரியன் மாணாக்கனைக்கேட்பது. இது அறியாமையால் அல்ல. மாணாக்

கன் உணர்ச்சியை ஆசிரியன் உறுதிப்படுத்திக்கொள்ளும் நிமித்தம். அறியாவினுவென்பது மாணுக்கன் ஆசிரியனைக் கேட்பது. இதற்கு மாணுக்கனது அறியாமையேகாரணம். அவ்வறியாமையை நீக்கிக்கொள்ளும்பொருட்டுக் குருவைக் கேட்டுத்தெளிதல். பரமசிவன் குமரனைக்கேட்டது அறி வினு வகுப்பிற்சேரும். கந்தபுராணம், அயனைச்சிறைநீக்கு படலம் முப்பத்தெட்டாவது செய்யுளைப்பார்க்க. அதை யிங்கெடுத்தோத இடம்கொடுப்பீர்களாக.

முற்றொருங்குணருமாதி முதல்வகேள்உலகமெல்லாம்
பெற்றிடும்அவட்குநீமுன் பிறருணராதவாற்றால்
சொற்றதோர்இனையமூலத் தொல்பொருள்யாருங்கேட்ப
விற்றனவியம்பலாமோ மறையினுவிசைப்பதல்லால்.

சிவபெருமான் குடிலையின் பொருளை யுமையவளுக் குரைத்தார் என்றும், உரைத்தது ரகஸ்யமாய் என்றும், தெற்றெனத்தெளியும். இது கேட்டிருந்த எம்பெருமான், அப்பொருளைப் பரமசிவன் தன்னைக்கேட்க அதை ரகஸிய மாக சிவபெருமான் காதில்சொன்னுர். ஆகையால் சிவபெ ருமானுக்குப் பிரணவத்தின்பொருளை உபதேசித்தாரென்ற கொள்கை நீக்கற்பாலது. அப்பிரணவத்தின் பொருளைத் தான் முன் உணராதிருந்து பின் முருகனுல் உணர்ந்தால், அதை யதற்குமுன் உமையவட்குச் சிவபெருமான் எப்படி புணர்த்தல்கூடும். "குழந்தாய், முருகா சதுர்முகனைப் பிர ணவப்பொருளைக்கேட்டு, அவன் அந்தக் கேள்விக்கு உத் தரம்அளிக்க இயலாதகாரணம்பற்றி யவனைச் சிறைப்படுத்தி னுயே, அப்பொருளை நீ சொல்லவல்லையோ" வென்றுர். குமரன் அப்பொருளைச் சொல்லக்கேட்டு சிவபெருமான் ஆனந்தித்தார். இம்மட்டே நாம் கொள்ளவேண்டியது. முருகனுல் சிவபெருமான் உபதேசம்பெற்றுர் என்பது அப

சாரம்; ச்ருதி, யுக்தி, யனுபவத்தை யொட்டியதாவென்று அன்பர் சிகாமணிகளே, புலவர் சிகாமணிகளே சற்றே கவனிப்பீர்களாக.

அப்படியானுல் "தகப்பன்சாமி" என்றபெயர் முருகனுக்குவருவானேன். அதைப் பக்தசிரோமணியாகிய அருணகிரிநாதரும் ஒப்புக்கொண்டிருக்கிருரே. (1098-புவிக்குன்பாதமதை நினை என்ற திருப்புகழைப் பார்க்க). இதற்கென்னகாரணம்? கந்தபுராணம், அயனைச் சிறைநீக்கு படலம், இருபத்தொன்பதாவது செய்யுளை நோக்குக.

மைந்தநின்செய்கையென்னே மலரயன்சிறைவிடென்று
நந்திநம்பணியாலேகி நவின்றதுங்கொள்ளாய்நாமும் [ருக்
வந்துரைத்திடினுங்கேளாய் மறுத்தெதிர்மொழிந்தாய் என்
கந்தனைவெகுள்வான்போலக் கழறினன்கருணைவள்ளல்.

எம்முருகன் அயனைச் சிறையிட்டார். சிவபெருமான் நந்திதேவரை முருகன்பாலனுப்பி நான்முகனைச் சிறைநீக்குவானருளினர். எம்முருகன் "நீக்கலன்" என்று நந்திக்கு மறுமொழி கூறி, சிவபெருமான் நேரில் ஆஞ்ஞாபிக்க எம்முருகன் அயனைச் சிறைநீக்கியருளினன். இது காரணம் பற்றியே எம்முருகன் "தகப்பன்சாமி" யென்ற பட்டம் பெற்ருன்.

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடமவாழ்கசெவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியாரெல்லாம்.

திருமுருகாற்றுப்படை பொழிப்புரை

முற்றுப்பெற்றது.

# அரும்பத விளக்கம்.

## திருப்பரன் குன்றம்.

ஏர்பு — எழுந்து
ஓ — ஓய்வு
செல் — இடி
கமம் — நிறைவு
தலைப்பெயல்-முதல்பெய்ச்சல்
நுசுப்பு — இடுப்பு
செயிர் — குற்றம்
கோபம் — இந்த்ரகோபப்பூச்சி
காசு — ரத்னம்
சில்காழ் — காஞ்சி-ஓர் ஆபரணம்
பொலம் — பொன்
ஓதி — கூந்தல்
மண்ணுறு - அலங்கரி
வலம்புரி — வலம்புரிச்சங்கம்
வெள்ளில - விளா
குழமுறி — தளிர்
துகள் — குற்றம்
பிண்டி — அசோகம்
காழ் — வைரம்
நறும்குறடு - சந்தனக்கட்டை
இணர் — பூங்கொத்து

சிலம்பகம் - மலையிடம்
மந்தி — குரங்கு-சூர்யன்
கண்ணி — தலைமாலை
அடுக்கம் — மலை
கதுப்பு — மயிர்
கூகை — கோட்டான்
பிணர் — கரடுமுரடு
விறற்களம் - வெற்றிக் களப் (பாட்டு)
பிணம் — மாம்ஸம்
துணங்கை - ஓராட்டம்-இரண்டுகையிலும் பெருவிரல் தவிர மற்றவிரல்களை முடக்கி இரண்டுகையும் சேர்த்து மார்பில் பெருவிரல்களைக்கொண்டு ஆடுமாட்டம்
மறு — குற்றம்
செரு — சண்டை
நியமம் — கடைத்தெரு
மறுகு — தெரு
எல் — சூர்யன்.

## திருச்சீரலைவாய்.

வை — கூர்மையான
நுதி — நுனி, முனை
ஓடை — முகபடாம்

மருங்கு — பக்கம்
கால் — காற்று
மீன் — நக்ஷத்ரம்

| | |
|---|---|
| ஆர்வலர்-யாசகர், அன்பர்கள் | உக்கம் — பக்கம்-விலா |
| எம் — ஏமம் -இன்பம் | கலிங்கம் — ஆடை |
| செறுநர் — பகைவர் | எஃகு — வேல் ஆயுதம் |
| சமம் — ஸமபாவனை | தொடி — ஓராயுதம் |
| கறுவு — விரோதம்-கோ | கொட்ப - ஸஞ்சரிக்க, சுழல |
| களம் — யுத்தம் [பம் | வதுவை — கல்யாணம் |
| மடவரல் — இளம்பெண் | வயிர் — ஊது கொம்பு. |

## திருவாவினன் குடி.

| | |
|---|---|
| சீரை — மரவுரி | மூவெயில் — மூன்றுகோட் . |
| உரிவை — தோல் | டை, த்ரிபுரம் |
| முகை — மொட்டு | மருப்பு — யானைத் தந்தம் |
| அவிர் — விளங்குகின்ற | தடக்கை -வளைந்ததுதிக்கை |
| திதலை — தேமல் | பகலில் —பகுக்கும்போது |
| பருமம் - 14-கோவைகொ | மீன் - நக்ஷத்ரம் |
| [ண்ட மேகலை | மீன் -கடல் (இடவாகுபெயர்) |
| தூம்பு —ஒட்டை, தொளை | அந்தரக்கொட்பினர் -ஆகாய |
| புள் — பறவை | [ஸஞ்சாரிகள். |
| வலவயின் -வெற்றிக்களத்தில் | |

## திருவேரகம்.

| | |
|---|---|
| இருமூன்று - ஆறு ஷட்கர்மம். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். | முத்தீ — த்ரேதாக்னி, ஆஹவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்நேயம் |
| இருவர் — தாய் தந்தையர் | காழகம் — வஸ்த்ரம் |
| அறுநான்கிரட்டி - நாற்பத்[தெட்டு | அருமறை - ஆறெழுத்து, சரவணபவ |
| | விரை - வாஸனை |

## குன்றுதோருடல்.

| | |
|---|---|
| நறைக்காய் - ஜாதிக்காய் | குரவை —ஓராட்டம் |
| புட்டில் —தக்கோலக்காய் | உளர்ப்ப —தேய்க்க |
| வேலன் —பூஜாரி | குல்லை —கஞ்சா |
| குளவி —காட்டுமல்லிகை [மலைப்பச்சை | செச்சை —பூவெட்சி |
| அமை —மூங்கில் | குழல் —புல்லாங்குழல் |
| கூதாளி —தூதுளை, வெள் [ளரி | தகர் —ஆட்டுக்கடா |
| கேழ் —ஒளி | முழவு —மத்தளம் |
| தொண்டகம்-சிறுபறை | பிணை —பெண்மான். |

## பழமுதிர்சோலை.

| | |
|---|---|
| மறி — ஆடு | விடை —வ்ருஷபம்-கடா |
| வாரணம் — கோழி | பிரப்பு —(பிரம்பு-பிரப்பங்கூடை) |
| துருத்தி — ஆற்றிடைக் கு [றை | கணவீரம் — செவ்வலரி |
| சதுக்கம் — நாற்சந்தி | சிலம்பு — மலை |
| சந்தி — முச்சந்தி, ஐஞ் [சந்தி | குறிஞ்சி — மலைநாட்டுக்குரியபாட்டு |
| வைப்பு — ஊர் | |
| மன்றம் — ஊருக்குநடுவேயெல்லாருஞ்சேரும் மரத்தடி | இயம் — வாத்யம் |
| | குருதி — ரக்தம் |
| பொதி — ஸபை | முருகியம் — தொண்டகப்பறை |
| கந்து — மன்றையில் நட்டிருக்கும் குத்துக்கல் | ஆடுகளம் —வெறியாட்டாடுமிடம் |
| மண்ணி — அலங்கரித்து | பூட்கை — யானை |
| ஐயவி — வெண்கடுகு | பிணி — மயில் |
| ஐது — மெதுவாய் | இமயம் — இமயமலை |